**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**அ.வ.எண். 259/2021**

நாள்– 21.04.2022

பி.வா.சா.1 – **திரு.K.S. பூபதி**

**வாதிகள் தரப்பின் குறுக்கு விசாரணை**

வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் வேலுசாமி மற்றும் நாங்கள் 5 பேர் சேர்ந்து ஒரு நிலம் வாங்கினோம். அதனை வேலுசாமி எனக்கே எழுதி தந்து விட்டார். 2ம் வாதி வேலுச்சாமியிடம் கடன் வாங்கியிருப்பார் போல் தெரிகிறது, அது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. அது சம்பந்தமாக இந்த வழக்கு. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரை குறித்த விபரம் எனக்கு தெரியும். வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியாது, அவரை விசாரித்த விபரம் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 6 ஆவணம் நானும் வேலுச்சாமி, மற்றும் இன்னும் 3 பேர் அனைவரும் சேர்ந்து பொதுவில் வாங்கிய ஆவணம் ஆகும். அதில் தனசேகரன், சதீஸ்குமார், பழனிச்சாமி ஆகியோரும் சேர்ந்து பொதுவில் வாங்கியது. அந்த வா.சா.ஆ 6 ஆவணம் 2013ம் வருடம் கிரயம் வாங்கியது. 30 லட்சத்திற்கு தொகைக்கு கிரயம் வாங்கியது ஆகும். யாரிடமிருந்து கிரயம் பெற்றோம் என்றால் திலகவதி, வேலம்மாள் ஆகியோரிடமிருந்து கிரயம் பெற்றோம். விஸ்தீர்ணம் 79 செண்ட் கிரயம் பெற்றோம். தனசேகரன் மற்றும் சதீஸ்குமார் சேலத்தில் குடியிருக்கிறார். வேலுசாமி முதலில் பவானி, காளிங்கராயன்பாளையத்தில் குடியிருந்தார். தற்போது திண்டுக்கல் மாவட்டம், கூத்தம்பூண்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறார்.

(வாதிகள் தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி அடுத்த வாய்தாவிற்கு ஒத்திவைக்கப்படுகிறது)